# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை
*********************

### இந்திய - இலங்கை கடற்படையினரின் கூட்டுப்பயிற்சி SLINEX-2025

இந்திய - இலங்கை கடற்படையினர் இடையேயான 12ஆவது வருடாந்த இருதரப்பு பயிற்சி SLINEX-2025 ஆகஸ்ட் 14 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சியானது இரண்டு கட்டங்களாக நடத்தப்படும், முதலில் 2025 ஆகஸ்ட் 14 முதல் 16 வரை கொழும்பில் துறைமுகப் பயிற்சியும், அதைத் தொடர்ந்து 2025 ஆகஸ்ட் 17 முதல் 18 வரை கொழும்புக்கு அப்பால் கடல்சார் பயிற்சிகளுமாக நடைபெறும். இந்திய கடற்படையின் INS ஜோதி (Fleet Tanker) மற்றும் INS ராணா (நாசகாரி) ஆகியவை இப்பயிற்சிகளில் ஈடுபடுகின்றன. இதேவேளை , இலங்கை கடற்படையின் (SLNS) விஜயபாகு (Advance Offshore Patrol Vessel) மற்றும் SLNS சயுரா (OPV) ஆகியவை இலங்கை தரப்பில் இப்பயிற்சிகளில் ஈடுபடுகின்றன. இதற்கு மேலதிகமாக, இலங்கை விமானப்படை BEL 412 ஹெலிகொப்டர்களும் இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றன. அத்துடன் இரு கடற்படையினரதும் விசேட படைகளும் இப்பயிற்சியில் பங்கேற்கின்றன. SLINEX இன் கடந்த பதிப்பு விசாகபட்டினத்தில், 2024 டிசம்பர் 17 முதல் 20 வரை நடத்தப்பட்டது.

2. SLINEX-2025 பயிற்சியானது இரு கடற்படைகளுக்கும் இடையேயான பன்முக கடல்சார் நடவடிக்கைகளில் இயங்குதிறனை மேம்படுத்துதல், பரஸ்பர புரிதலை வளர்த்தல் மற்றும் சிறந்த செயற்பாடுகள்/நடைமுறைகளைப் பரிமாறிக்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. துறைமுக மட்ட நிகழ்வுகளில் விளையாட்டுப் போட்டிகள், யோகா அமர்வுகள் மற்றும் கலாசார நிகழ்வுகள் ஆகியவை உள்ளடங்கும். இதன் மூலமாக இரு கடற்படைகளின் அதிகாரிகளும் ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்ளவும், பொதுவான பெறுமானங்களை மீண்டும் வலுப்படுத்தவும், நட்பு மற்றும் தோழைமையின் பிணைப்புகளை உருவாக்கவும் வாய்ப்பளிக்கப்படுகின்றது. இலங்கை கடற்படையின் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் பி லியனகமகே, INS ஜோதி கப்பலின் கட்டளை அதிகாரி கப்டன் சேத்தன் ஆர் உபாத்யாயா மற்றும் INS ரணாவின் கட்டளை அதிகாரி கப்டன் கேபி ஸ்ரீசன், இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் ஆனந்த் முகுந்தன் ஆகியோர் SLINEX-2025 இன் ஆரம்ப விழாவில் கலந்துகொள்வார்கள்.

3. துறைமுக பயிற்சிகள், SME ஈடுபாடுகள் மற்றும் HARD சிமுலேட்டர் பயிற்சி ஆகியவை SLINEX-2025 பயிற்சிகளின்போது முன்னெடுக்கப்படும். கடல் மார்க்கமான பயிற்சிகளில் துப்பாக்கி பிரயோகம், தந்திரோபாய சூழ்ச்சிகள், கப்பலோட்டல் நுட்பங்கள், கப்பல்கள் இடையிலான தரையிறங்கல் உள்ளிட்ட ஹெலிகொப்டர் செயல்பாடுகள், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் மற்றும் கடல்சார் விசேட படை நடவடிக்கைகள் போன்ற பல பரிமாணங்களில் பயிற்சிகள் முன்னெடுக்கப்படுவதுடன், இது இரண்டு நட்பு கடற்படைகளுக்கு இடையே ஏற்கனவே காணப்படும் உயர் மட்ட இயங்கு திறனை மேலும் வலுவாக்குகின்றது.

4. முன்னதாக இந்திய கடற்படை டோர்னியர் கடல்சார் கண்காணிப்பு விமானங்களை குத்தகைக்கு வழங்கியிருந்தமை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூரலாம். கடந்த 3ஆண்டுகளில் இவ்விமானம் இலங்கையின் கடல்சார் கண்காணிப்பு திறனை மேம்படுத்தியது. இந்த விமானத்தின் பணிக்காலம் முடிந்த நிலையில் இந்தியாவுக்குத் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. SLINEX-2025க்காக கொழும்புக்கான விஜயத்தின் முன்னர், டோர்னியர் விமானத்துக்கான இணைச் சேவை உபகரணங்கள் மற்றும் உதிரிபாகங்களை அங்கிருந்து மீளப்பெறுவதற்காக INS ரணா ஆகஸ்ட் 11 ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்து வருகைதந்தது.

5. SLINEX பயிற்சி இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான ஆழமான ஈடுபாட்டை பிரதிபலிப்பதுடன் கடல்சார் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்துகிறது. இந்தியாவின் அயலுறவுக்கு முன்னுரிமை' என்ற கொள்கைக்கும், மாண்புமிகு பிரதமரின் 'பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி (SAGAR)' என்ற தொலைநோக்குப் பார்வைக்கும் இணங்க, இலங்கை கடற்படை மற்றும் இந்திய கடற்படை இடையேயான உறவுகள் அண்மைய ஆண்டுகளில் கணிசமாக வளர்ச்சிகண்டுள்ளது.

************

**கொழும்பு**
**12 ஆகஸ்ட் 2025**